**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி – பிப்ரவரி 2024**
**P203 படைப்பிலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு: பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. நாடக வழக்கு என்னும் சொல்லாட்சி காணப் பெறுகின்ற இலக்கண நூல் எது?
2. புதுக்கவிதையை 'உரைவீச்சு' என்றவர் யார்?
3. பாஞ்சாலி சபதம் என்னும் நூலின் ஆசிரியர் யார்?
4. புதினம் புளியமரம் என்றால், சிறுகதை தென்னைமரம் என்று கூறியவர் யார்?
5. என் சரித்திரம் என்னும் நூலின் ஆசிரியர் யார்?
6. கதவு என்னும் சிறுகதையின் ஆசிரியர் யார்?
7. கும்மி எந்தப் பாவினத்தைச் சார்ந்தது?
8. 'சர்ப்ப யாகம்' யாருடைய படைப்பு?
9. தமிழில் சங்க காலத்தை அடுத்து எழுதப்பட்ட முதல் நாடக இலக்கியம் எது?
10. உபபாண்டவம் என்னும் நாவலின் ஆசிரியர் யார்?
11. சிறுகதை மன்னன் என்றழைக்கப்படுவர் யார்?
12. நாடகம் என்ற சொல் முதலில் எந்தப் பொருளில் கூறப்பட்டது?
13. 'உரை' என்பதற்கு கலைக்களஞ்சியம் கூறும் பொருள் யாது?
14. கெ.டி.குரூஸ் எழுதிய நாவல் எது?
15. தொடை எத்தனை வகைப்படும்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.** **(5x3=15)**

1. எண்வகை மெய்ப்பாடுகளைக் குறிப்பிடுக.
2. சிறுகதையின் இயல்புகளில் ஏதேனும் மூன்றினைக் குறிப்பிடுக.
3. மொழிபெயர்ப்பு புதினம் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
4. குறுநாவல் – குறிப்பு வரைக.
5. பாத்திர முன்மாதிரி என்றால் என்ன?
6. பெண்களின் சிக்கல்களை வெளிப்படுத்தும் மூன்று சிறுகதைகள் யாவை? அவற்றின் படைப்பாளர்கள் யாவர்?
7. நனவோடை உத்தி என்றால் என்ன?
8. வாழ்விற்கு வழிகாட்டும் தத்துவ நெறிகளின் பயன்கள் இரண்டினைக் கூறுக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) புதுக்கவிதை உத்திகள் குறித்து ஆராய்க.

   (அல்லது)

   (ஆ) ஆசிரியப்பாவின் இலக்கணம், வகைகள் குறித்து எழுதுக?

2. (அ) பாத்திரப் படைப்பின் உத்திகளும் முறைகளும் குறித்து விளக்கி வரைக.

   (அல்லது)

   (ஆ) அகிலனின் சிறுகதைகளுள் ஒன்றான 'புயல்' சிறுகதையைத் திறனாய்வு செய்க.

3. (அ) தனி மனிதச் சிக்கல்களையும் சமூகச் சிக்கல்களையும் சிறுகதைகள் எவ்வாறு வெளிப்படுத்துகின்றன என்பதனை ஆராய்க.

   (அல்லது)

   (ஆ) காலந்தோறும் நாடகம் பெற்று வரும் மாற்றங்கள், சிறப்புகள் குறித்து விளக்குக.

❋❋ ❋